பதிவுத்துறை தலைவர் அலுவலகம்,
சென்னை - 600 028.

# சுற்றறிக்கை

**எண்.12446/C1/2019, நாள் :03.03.2021.**

பொருள்: இணையவழி தானாக பட்டா மாறுதல்(Automatic mutation of Patta) - சர்வே எண் உட்பிரிவு செய்ய தேவை எழாத (Non involving Sub division) ஆவணப் பதிவுகள் பொறுத்து முழுமையாக இணையவழி தானாக பட்டா மாற்றம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது - அறிவுரைகள் வழங்கி சுற்றறிக்கை பிறப்பிக்கப்பட்டது - தொடர்பாக.

பார்வை: 1.பதிவுத்துறை தலைவர் சுற்றறிக்கை எண்.56154/சி1/2018, நாள்.25.05.2018

2.பதிவுத்துறை தலைவர் அலுவலக மேல் வரைவு எண்.1852/சிஎஸ்1/2013, நாள்.06.01.2021 உடன் அனுப்பப்பட்ட அரசு ஆணை (நிலை) எண்.84, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை (SS-II(2 ), நாள்.04.02.2020

3.ஆணையர், நில அளவை மற்றும் நில வரித்திட்டம் நேர்முக கடித எண். கே8/30417/2019 (Sy) நாள்.03.02.2021

4. பதிவுத்துறை தலைவர் சுற்றறிக்கை எண்.12446/C1/2019 நாள் : 08.02.2021.

5. ஆணையர், நில அளவை மற்றும் நில வரித்திட்டம் நேர்முக கடித எண். கே8/30417/2019 (Sy) நாள்.02.03.2021

******

பார்வை -4-ல் குறிப்பிடும் சுற்றறிக்கையின்மீது அனைத்து பதிவு அலுவலர்களின் கவனமும் ஈர்க்கப்படுகிறது.

2.அசையாச் சொத்து குறித்த உரிமை மாற்றம் செய்யப்படும் ஆவணப் பதிவுகளின்போது சர்வே எண் உட்பிரிவு செய்ய தேவை எழாத (Non involving Sub-division)சொத்துக்கள் பொறுத்து ஆவணப் பதிவு முடிந்த நிலையிலேயே தானாக முற்றிலும் இணையவழி பட்டா மாற்றம் தொடர்பாக, சார்பதிவாளரால் கணினிவழி ஒப்புதல் வழங்கிடும் நிலையில் பார்வை 2-ல் கண்ட அரசாணையில் பத்தி 3 உட்பிரிவு ( 2)

...2...

கண்டுள்ள ஐந்து காரணிகளை கவனத்தில் கொண்டு முழுமையாகப் பரிசீலித்து அதன் பின்னரே கணினிவழி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளதன் அடிப்படையில் அசையாச் சொத்து பொறுத்த ஆவணம் எழுதிக் கொடுத்த நபரின் பெயரும், ஏற்கனவே வழங்கப்பட்ட இணையவழி பட்டாவில் கண்டுள்ள நில உரிமையாளர் பெயரினையும் ஒப்பீடு செய்து இரண்டும் ஒன்றாக இருக்கும் நிகழ்விலேயே 'Automatic Patta Mutation' குறித்து ஒப்புதல் குறியீடு சார்பதிவாளரால் வழங்கப்படவேண்டும் என்பன உள்ளிட்ட நெறிமுறைகள், மேற்குறிப்பிடும் சுற்றறிக்கையின்படி ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.

3. இந்நடைமுறை தொடர்பாக தற்போது பெறப்பட்டுள்ள பார்வை-5-ல் குறிப்பிடும் நிலஅளவை ஆணையரது கடிதத்தில், 'Automatic Patta Mutation' குறித்து ஒப்புதல் குறியீடு 48-சார்பதிவாளர்களால் தவறாக வழங்கப்பட்டதாகவும் இதனில் பார்வை 2-ல் குறிப்பிடும் அரசாணையின் நிபந்தனைகளின்படி செயல்படாமைக்காக சம்பந்தப்பட்ட பதிவு அலுவலர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. எனவே மாவட்ட பதிவாளர்கள் இதனுடன் அனுப்பப்படும் பார்வை-5-ல் கண்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட அவரவர் எல்லைக்குட்பட்ட சார்பதிவாளர்களிடம் தவறு குறித்து உரிய விளக்கம் பெற்று அனுப்பிட கோரப்படுகிறது.

4. எனவே பார்வை -4-ல் குறிப்பிடும் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்ட நெறிமுறைகளை தவறாது பின்பற்றுமாறு பதிவு அலுவலர்களுக்கு மீளவும் வலியுறுத்தப்படுகிறது. மேலும், 'Automatic Patta Mutation' குறித்து ஒப்புதல் குறியீடு வழங்கும் நிகழ்வுகளில் சார்பதிவாளர்கள் கீழ்கண்ட விவரங்களை கவனத்தில் கொள்ள கோரப்படுகிறது.

அசையாச் சொத்து குறித்து உரிமை மாற்றம் செய்யப்படும் ஆவணப் பதிவுகளின்போது சர்வே எண் உட்பிரிவு செய்ய தேவை எழாத (Non involving Sub- division) சொத்துக்கள் பொறுத்து **STAR 2.0** மென்பொருளில் செய்யப்பட்ட மாற்றங்களின் அடிப்படையில் அவ்வாவணங்கள் ஆவணப் பதிவு முடிந்த நிலையிலேயே தானாகவே முற்றிலும் இணையவழி பட்டா பெயர் மாறுதல் செய்திட (Automatic Patta Mutation) இயல்பாகவே மென்பொருளில் கண்ட விருப்பத்தேர்வில் (option menu) தேர்வு செய்யப்பட்டு "tick" ☐ குறியீடு செய்யப்பட்டிருக்கும். இந்நிலையில் பதிவு அலுவலர்கள் பார்வை-4-ல் கண்ட சுற்றறிக்கையின் பத்தி 5, 6 மற்றும் 7-ல் கண்ட நெறிமுறைகளுக்குட்பட்டு அவ்வாவணங்கள் இணைய வழி தானாக பட்டா பெயர் மாற்றம் செய்திட *'தகுதியானது அல்ல'* என தெரியவரின் உடன் அந்த விருப்பத்தேர்வில் இயல்பாக தெரிவு செய்யப்பட்ட "tick" குறியீட்டினை நீக்கம் செய்துவிட வேண்டுமென தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில் எதிர்பாராத தவறுகள் தடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.



Verified RealEstate™

நாளது தேதியில் வழங்கப்படும் அறிவுரைக்கு பின்னரும், இணையவழி பட்டா மாற்றம் தொடர்பாக, சார்பதிவாளரால் கணினிவழி ஒப்புதல் வழங்கிடும் நிகழ்வுகளில் தவறாக ஒப்புதல் வழங்கப்பட்டதாக கவனத்திற்கு வரப்பெறின் சம்பந்தப்பட்ட பதிவு அலுவலர் மீது தமிழ்நாடு குடிமைப்பணி விதிகளில் உரிய விதிகளின்கீழ் தக்க ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/03.03.2021
பதிவுத்துறை தலைவர்

/ஆணையின்படி/

கூடுதல் பதிவுததுறை தலைவர்
(முத்திரை மற்றும் பதிவு)

பெறுநர்:

அனைத்து துணைப்பதிவுத்துறை தலைவர்கள்.
அனைத்து மாவட்டப்பதிவாளர்கள்.
அனைத்து சார்பதிவாளர்கள்.

நகல் :

1. இயக்குநர், பதிவுத்துறை பயிற்சி நிலையம், சென்னை – 14.
2. அனைத்து உயர்அலுவலர்கள், பதிவுத்துறை தலைவர் அலுவலகம்.
3. பதிவுத்துறை தலைவரின் நேர்முக எழுத்தர்.
4. அரசு முதன்மை செயலாளர், - தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
   வணிகவரி மற்றும் பதிவுத்துறை,
   தலைமைச் செயலகம்.
5. ஆணையாளர், நில அளவை மற்றும் நிலவரித்திட்டம்,
   சேப்பாக்கம், சென்னை.
6. நேர்முக உதவியாளர்(தனி),
   மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர்.
7. கணினி மென்பொருள் பிரிவு. - இணையத்தில் மேலேற்றம் செய்வதற்கு.
8. முக்கிய ஆணைக் கோப்பு.

Verified RealEstate™